DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, AMBATTUR
TIRUVALLUR DISTRICT

**STC.No.305/2022**

Deposition of Witness for – Prosecution : DW1
Defence:

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஹரிஸ் | | : |
| த/பெ | : சிவராமன் | மதம் | : |
| கிராமம் | : அயப்பாக்கம் | தொழில் | : IT |
| வட்டம் | : சென்னை | வயது | : 41/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of Date

---

**தேதி – 24.11.2025**

**குறுக்கு விசாரணை: DW1**

1. புகார்தாரரிடம் எந்த காரணத்திற்காக இவ்வழக்கு காசோலை தரப்பட்டது என்றால் 2015 ஆம்ஆண்டு வீடு வாங்குவது தொடர்பாக பாதுகாப்பிற்காக 2 காசோலை தரப்பட்டது. எந்த இடத்தில் வீடு வாங்கப்பட்டது என்றால் அம்பத்தூர் பொன்னம்பலம் தெருவில் வீடு வாங்கப்பட்டது. வீடு வாங்குவது தொடர்பாக எந்த ஒப்பந்தம் எங்களிடையே போடப்பட்டது என்றால் முதலில் ரூ.1,75,000/- முன் தொகையாக கொடுத்தேன் அதற்கு ஒப்பந்தம் எதுவும் போடப்படவில்லை ரசீது மட்டும் கொடுத்தார். வீடு வாங்குவது தொடர்பாக எனக்கும் புகார்தாரருக்கும் இடையே எந்த ஒப்பந்தமும் போடவில்லை என்றால் 2015 ல் கிரைய பத்திரம் மற்றும் கட்டுமான ஒப்பந்தம் எங்களிடையே போடப்பட்டது.

மேற்படி கிரைய பத்திரம் கட்டுமான ஒப்பந்தம் முறையே சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். எதிரி கட்டுமான ஒப்பந்ததத்தில் உள்ள சரத்தில் குறைபாடு உள்ளதாக Consumer Court ல் வழக்கு எதேனும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தாக்கல் செய்தேன் அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

2. ஏனெனில் கட்டிட Approval Plan ஆவணம் வழக்கில் தாக்கல் செய்யாததால் வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டது. எந்த குறைபாடு புகார்தாரர் தரப்பில் உள்ளது என்பதற்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் கட்டிடமானது முறையே Approval ல் உள்ளபடி கட்டவில்லை என்று தாக்கல் செய்துள்ளேன். குறிப்பிட்ட காலத்திற்குள் கட்டிடத்தை புகார்தாரர் முடித்து தரவில்லை என்று பரிகாரம் நுகர்வோர் நீதிமன்றத்தில் கேட்டேனா என்றால் இல்லை. எந்த ஆண்டு நுகர்வோர் நீதிமன்றத்தை அணுகினேன் என்றால் 2016,2017 குறிப்பிட்டு தெரியவில்லை. அந்த வழக்கு எப்போது தள்ளுபடி செய்யப்பட்டது என்று சரியாக ஞாபகமில்லை. அந்த நுகர்வோர் நீதிமன்றத்தில் தரப்பட்ட வழக்கு முழு விசாரணையின் பின்பு தான் வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். புகார்தாரர் மீது போலிசாரிடம் புகார் கொடுத்துள்ளேனா என்றால் 2022 ஜீலை முதல் வாரத்தில் போலிசாரிடம் புகார் கொடுத்தேன். போலிசாரிடம் கொடுத்த புகார் மனுவில் 2016 ல் புகார்தாரரிடம் பாதுகாப்பிற்காக காசோலை

தரப்பட்ட விவரம் தெரிவித்துள்ளேனா என்றால் இல்லை. போலிசாரிடம் கொடுத்த எந்த புகாரிலும் பூர்த்தி செய்யப்படாத காசோலை கொடுத்த விவரம் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான், நான் மறந்துவிட்டேன். நுகர்வோர் நீதிமன்றத்தில் கொடுத்த மனுவிலும் பூர்த்தி செய்யப்படாத காசோலை புகார்தாரரிடம் பாதுகாப்பிற்கு தரப்பட்ட விவரத்தை தெரிவிக்கவில்லை என்றால் சரிதான்.

3. எ.ம.சா.ஆ.2 ஆவணத்தில் Planning Approval தரப்பட்டு Land Approval மற்றும் Building Approval நிலுவையில் உள்ளதா கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். Planning Approval உள்ளது என்ற விவரம் தெரிந்த பின்பு இவ்வழக்கின் காசோலை புகார்தாரரிடம் தரப்பட்டது என்றால் சரியல்ல. கட்டிட ஒப்பந்தத்தில் உள்ள சரத்துகளின் முழு திருப்தி ஆன பின்பு தான் இவ்வழக்கின் காசோலை தரப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு காசோலையை 2022 ஆம் ஆண்டு அனைத்து ஆவணங்களையும் சரிபார்த்த பின்பு தான் தரப்பட்டது என்பதால் தான் நுகர்வோர் நீதிமன்றத்தில் போடப்பட்ட மனுவிலும், போலிசாரிடம் போடப்பட்ட புகார் மனுவிலும் அதை குறித்து கூறவில்லை என்றால் சரியல்ல. கிரைய பத்திரம் மற்றும் கட்டிட ஒப்பந்தத்தில் உள்ளவாறு அனைத்துமே பூர்த்தி செய்து கொடுத்ததால் 2022 ல் காசோலை புகார்தாரரிடம் தரப்பட்டது என்றால் சரியல்ல. சட்டப்படியான பணத்திற்கு தான் புகார்தாரருக்கு நான்

காசோலை கொடுத்ததால் காசோலையில் உள்ள தொகைக்கு நான் கடப்பாடு உள்ளவர் என்றால் சரியல்ல. வழக்கறிஞர் அறிவிப்பு பெற்றுக்கொண்டேனா என்றால் இல்லை. 3 இடங்கள் நான் மாறிவிட்டேன் எந்த முகவரிக்கு அனுப்பப்பட்டது என்று எனக்கு தெரியாது. எனக்கு அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு பெற்றுக்கொண்டதாக என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ளதா என்றால் எதிரியின் வழக்கறிஞர் இல்லை என்று சைகை காட்டியதின் பேரில் சாட்சி இல்லை என்று பதில் அளித்தார்.

4. வழக்கறிஞர் அறிவிப்பில் உள்ள முகவரி தான் அஞ்சல் ஒப்புகை அட்டையில் உள்ள முகவரி அதை நான் பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல. வழக்கறிஞர் அறிவிப்பு காணப்பட்ட முகவரியில் தான் இவ்வழக்கானது தொடரப்பட்டது என்றும், அதே முகவரிக்கு தான் அழைப்பாணை அனுப்பப்பட்டு அதன் பேரில் நான் ஆஜராகி உள்ளேன் என்றால் சரியல்ல. சட்டப்படி கடப்பாடு உள்ளதால் தான் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் வழக்கறிஞர் அறிவிப்பு நான் பெறவில்லை.

மறுவிசாரணை இல்லை.

MAHASAKTHI K

Digitally signed by MAHASAKTHI K